ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1487/3 - 2007 මාර්තු 05 වැනි සඳුදා - 2007.03.05

*1487/3 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 212 ஆம் பிரிவின்கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய,*
*பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2007, மாச்சு 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளின் அங்கீகாரத்திற்கான ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆணையாளர் தலைமையதிபதி இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எல்லா அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளும் பற்றிய இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

3. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தம்மை, அதிகாரம்பெற்ற பிரதிநிதியாகப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் தனியாள் ஒருவர் அத்தகைய நோக்கத்திற்கென ஆணையாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும் படிவத்தில் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அதற்கென விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஆள் எவரும்–
இருபத்தொரு வயதை அடைந்தவராகவும் இலங்கைப் பிரசையாகவும் இலங்கையில் வதிபவராகவும் அத்துடன்

(அ) 2 ஆவது திணைக்களப் பரீட்சையில் சித்திபெற்ற உண்ணாட்டரசிறைத் திணைக்கள வரிமதிப்பாளராக 2 ஆவது திணைக்களப் பரீட்சையில் சித்திபெற்றதன் பின், அந்தத் தரத்தில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத சேவையுடையவராகவும் அல்லது,

(ஆ) கம்பனி (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு கணக்காய்வாளராகப் பதிவுசெய்யப்பட்ட தனியாளாக அல்லது

(இ) இலங்கை கணக்காய்வாளர் சேவையில் ஒரே உறுப்பினராக II ஆம் வகுப்பு கணக்காய்வுக் கண்காணிப்பாளர் தரத்திற்குக் குறையாத அச்சேவைக்கென போட்டிப்பரீட்சைப் பெறுபேற்றின் நியமனம் பெற்றவராகவும்.

(ஈ) இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையில் உறுப்பினராக அச்சேவையில் II ஆம் வகுப்பிற்குக் குறையாது போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றில் அச்சேவைக்கு நியமனம் பெற்றவராகவும் அல்லது

(உ) (i) பின்வருவனவற்றுள் ஒரு தகைமையைப் பெற்றவராகவும் அதாவது.-

(அ) பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் உரிமம்/இடைநிலைச் சான்றிதழ் பெற்றவராக.

(ஆ) ஆகுசெலவு முகாமை கணக்காளர் நிறுவனத்தின் உயர் தொழில் பகுதி I இல் ஆகுசெலவு முகாமைப் பட்டய நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்திபெற்றவராக, அல்லது

(இ) சான்றுபெற்ற கணக்காளரின் பட்டம்பெற்ற சங்கத்தின் உயர்தொழில் பரீட்சைப் பிரிவு I இல் சித்திபெற்றவராகவும், அத்துடன்

(ii) கணக்கியலில் குறைந்தது பத்துவருட பின்னிலைப்படிப்புத் தகைமை அனுபவம் உள்ளவராகவும் இருந்தாலொழிய, அதிகாரம்பெற்ற பிரதிநிதியாக பதிவுசெய்துகொள்வதற்கோ தமது பெயரை இடாப்பில் வைத்திருக்கவோ உரித்துடையவராதல் ஆகாது.

5. ஆள் எவரும்-

(அ) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் சித்தசுவாதீனமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால், அல்லது

(ஆ) கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவரென தீர்ப்பளிக்கப்பட்டிருந்து அத்தகைய கடனிறுக்க முடியாத நிலை அல்லது முறிவு, முற்றிலும் அல்லது பகுதியளவில் தடுக்கவியலாத இழப்புகளால் அல்லது துரதிஷ்டவசத்தால் ஏற்பட்டதெனக்கூறும் சான்றிதழொன்று தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் வழங்கப்பெறாதவராகவும் இருந்தால், அல்லது

(இ) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் இலங்கையிலோ அல்லது வேறிடத்திலோ ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறொன்றைப் புரிந்தவரென குற்றஞ்சாட்டப்பட்டவராக இருப்பின், அல்லது

(ஈ) உயர்தொழிலுக்குரிய பிறழ்நடத்தைத் தவறிழைத்தவராகக் காணப்படின், அதிகாரம்பெற்ற பிரதிநிதியாக பதிவுசெய்துகொள்வதற்கோ தமது பெயரை இடாப்பில் வைத்திருப்பதற்கோ உரித்துடையவராதல் ஆகாது.

6. ஆணையாளர் தலைமையதிபதி பதிவுக்கு விண்ணப்பிக்கும் தனியாள் ஒருவர் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவுசெய்துகொள்ள உரித்துடையவராவதெனத் திருப்திப்படுமிடத்து, அத்தகைய தனியாளைப் பதிவுசெய்து அத்தகைய ஆளுக்கு அவரது பதிவை அத்தாட்சிப்படுத்தும் கடிதத்தையும் வழங்குதல் வேண்டும்.

7. இக்கடிதம் அவரது பெயர் ஆணையாளர் தலைமையதிபதியினால் பேணிவரப்படும் இடாப்பிலிருந்து நீக்கப்பெற்றதன் மேல் மீளப்பெறப்படுதல் வேண்டும்.

(அ) அத்தகைய தனியாள்.- பெயர் அகற்றுதலுக்காக எழுத்தில் விண்ணப்பித்திருப்பின்

(ஆ) அத்தகைய தனியாள்.- ஒழுங்குவிதி 5 இல் குறிப்பிடப்பட்ட தகுதியீனங்களுக்கு ஆளாகியிருப்பின்

(இ)அத்தகைய தனியாளினால் அவரது உயர்தொழில் தகைமையில் புரியப்பட்ட ஏதேனும் செயல் கவனயீனம், நேர்மையின்மை அல்லது தவறான நடத்தை காரணமாக அத்தகைய தனியாளின் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்படல் வேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதி கருதினால்,

அகற்றிவிடுதல் வேண்டும்.

8. ஆணையாளர் தலைமையதிபதி, இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளின் பெயர் நிரலொன்றை வருடத்தில் ஒரு முறையேனும் அவ்வருட மாச்சு மாதம் முப்பத்தோராம் நாளுக்குப் பிந்தாது வர்த்தமானியில் பிரசுரிக்கச் செய்யலாம்.

*3-597*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.